சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

சுய கற்றல் கையேடு

புவியியல்

தரம் - 10

தொகுப்பு :- ஏ.எஸ்.எப் ஷஸ்னா

(கே/தெஹி/ சரஸ்வதி த.ம.வி மியனவிட)

## அலகு - 4 இலங்கையின் விவசாயம்.

### பகுதி - இலங்கையில் விவசாயம் சார்ந்த பிரச்சினைகளும் போக்குகளும்.

★ **இலங்கையின் விவசாயம் சார்ந்த பிரச்சினைகள்.**

1. நிலப் பயன்பாடு சார்ந்த பிரச்சினைகள்
2. உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள்
3. வர்த்தகம் சார்ந்த பிரச்சினைகள்
4. சூழல் சார்ந்த பிரச்சினைகள்

1. நிலப் பயன்பாடு தொடர்பான பிரச்சினைகள்

- ✓ நிலப் பற்றாக்குறையும், நிலத் துண்டாட லும்.
- ✓ நெல் வயல் நிலங்களை நிரப்புதல்.
- ✓ விவசாய நிலங்களை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துதல்.
- ✓ சனத்தொகையின் விரைவான அதிகரிப்பினால் வீடு கட்டுவதற்காகவும், ஏனைய அபிவிருத்தி நோக்கங்களுக்காகவும் நிலம் பயன்படுத்தபடல்.
- ✓ ஒரே நிலத்தில் நீண்டகாலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதனால் விளைச்சல் குறைவடைதல்.

2. உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள்.

- ✓ பழைய நிலங்களின் பயன்பாட்டினால் விளைச்சல் குறைவடைதல்.
- ✓ நிலத்துண்டாட லால் இயந்திரப். பாவனை மேற்கொள்ள முடியாமை.

- ✓ ஏக்கருக்கான விளைச்சல் குறைவடைந்துள்ளது.
- ✓ வரண்ட வலயப் பிரதேசங்களில் நீர் பற்றாக்குறை , ஈரவலய பிரதேசங்களில் மேலதிக நீர்.
- ✓ உரங்களின் விலை அதிகரிப்பு.
- ✓ தொழில்நுட்பத் திறன் மிக்க ஊழியர் பற்றாக்குறையும் இளைய தலைமுறையினர் விவசாயத் துறைசார் வேலைகளில் ஈடுபட நாட்டமின்மையும்.
- ✓ பொருத்தமற்ற உபகரணப் பாவனை.
- ✓ உற்பத்தி செலவு அதிகரித்தமையால் விவசாயிகளினால் பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்த முடியாமை.
- ✓ உற்பத்தித் தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்தப்படாமை.
- ✓ புதிய இன மாடுகளின் விலைகள் அவற்றின் உணவு பராமரிப்பு போன்றவற்றிற்கான செலவு அதிகரித்தல்.

  (உதாரணம்:- பால் பொருட்கள் விலையேற்றம்)
- ✓ மீன்பிடி உபகரணம், மீன்பிடிப் படகு, குளிரூட்டி , எரிபொருள் செலவு அதிகரித்தல்.
- ✓ போதியளவு களஞ்சிய வசதி குளிரூட்டி வசதி காணப்படாமை.
- ✓ போதியளவு போக்குவரத்து வசதியின்மை.
- ✓ தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படல்.
- ✓ மரபு ரீதியான பரிமாற்ற முறை மறைந்து சென்றமையால் உழைப்பைப் பெற்றுக் கொள்ள கடினமாக உள்ளது.
- ✓ குறைவான தொழில்நுட்ப அறிவு திறமையான தொழிலாளர் இன்மை.
- ✓ இயந்திர உபகரணங்களின் விலை அதிகரித்தல்.
- ✓ தரமற்ற விதைகளின் பாவனையால் சந்தை தேவைக்கேற்ப உற்பத்தி போதியதாக இன்மை.
- ✓ உற்பத்தி மானிய வேலைத்திட்டம் முறையாக இன்மை.
- ✓ நில உரிமை தொடர்பான பிரச்சினையால் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமம்.

(உதாரணம் :- சிறு ஏற்றுமதி பயிர்கள்)

(03) வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகள்.

- ✓ உற்பத்தியைக் கொள்வனவு செய்கின்ற மத்திய நிலையங்கள் போதியளவு இல்லாமை.
- ✓ இடைத்தரகர்களின் நடவடிக்கைகளினால் விவசாயிகளின் வருமானம் குறைவடைதல்.
- ✓ உள்ளூர், சர்வதேச சந்தைகளில் ஏற்படுகின்ற விலைத்தளம்பல்.
- ✓ உள்ளூர் நுகர்வோர் அதிகரிப்பதனால் ஏற்றுமதி மட்டுப்படுத்தல்.

  (உதாரணம்:- நெல், தெங்கு)

- ✓ சர்வதேசச் சந்தையில் விலை தளம்பல் ஏற்படுதல்.
- ✓ பிறதியீட்டுப் பொருட்களால் ஏற்படுகின்ற போட்டித்தன்மை.

  (உதாரணம்:- இயற்கை இறப்பர் - செயற்கை இறப்பர், தேயிலை - பல்வேறு பான வகை ,கொக்கோ கோலா, பெப்சி)

- ✓ வேறு நாடுகளுடன் போட்டி.

  (உதாரணம்:- தேயிலை - கென்யா, இறப்பர் - மலேசியா)

- ✓ தரக்குறைவான பொருட்களைச் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்தல்.

  (உதாரணம்:- இலங்கைத் தேயிலையுடன் பல்வேறுபட்ட தேயிலைகளைக் கலத்தல்.)

(04) சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்.

- ✓ பூச்சிகளிலிருந்து நோய்களையும் , தொற்று நோய்களையும் எதிர் கொள்ளல்.

  (உதாரணம்:- தென்னை - வண்டடித்தல் நோய் , தென்னை - வாடல் நோய், மரக்கறி பழவகைகளுக்குப் பரவுகின்ற வெண்புள்ளி நோய், கால்நடைகளுக்குப் பரவுகின்ற நோய்)

- ✓ வெள்ளப்பெருக்கு, மண் சரிவு, வரட்சி, அதிக மழைவீழ்ச்சி என்பவற்றினால் பயிர்களுக்குத் தீங்கு ஏற்படுதல்.

- ✓ சூறாவளி, சமுத்திர நீரோட்டங்கள், சுனாமி காரணமாக மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரச்சினைகள் உருவாதல்.

- ✓ உரம், கிருமிநாசினிகள், இரசாயனப் பாவனை என்பவற்றினால் நீர், நிலம் மாசுபடுதல் காரணமாகச் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுதல்.
- ✓ சூழற்தொகுதி நிலைத்திருப்பதற்கு அவசியமான தாவரங்களும், விலங்குகளும் அழிவடைதல்.
- ✓ விலங்குகள், தாவரங்களின் தீங்கு விளைவிக்கும் பகுதிகள் சுற்றாடலுக்குள் சேர்க்கப்படல்.

★ **விவசாயத்தின் நவீன போக்குகள்**

1. உற்பத்தி சார்ந்த நவீன போக்குகள்.
2. தொழில்நுட்பம் சார்ந்த நவீன போக்குகள்.
3. வர்த்தகம் சார்ந்த நவீன போக்குகள்.

(01) உற்பத்தி சார்ந்த நவீன போக்குகள்.

- ✓ உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்காக மானியம் வழங்குதல்.
- ✓ விவசாய உற்பத்திகளை பன்முகப்படுத்தல்.

உதாரணம்:- தேயிலை - உடனடி தேயிலை

தெங்கு - பலதரப்பட்ட அலங்கார உற்பத்திகள்.

அரிசி - அரிசிமா

- ✓ குறைந்த காலத்தில் கூடிய விளைச்சல் தரக்கூடிய விதை இனங்களை அறிமுகம் செய்தல்.

(உதாரணம்:- நெல் - BG 407 , BG 450)

- ✓ விவசாயப் பயிர்களுடன் தொடர்பான ஊடுபயிர்களை அறிமுகப்படுத்தல்.

(உதாரணம்:- தென்னை நிலங்களில் அன்னாசி, வெற்றிலை, கொடித்தோடை, மிளகு பயிர்ச்செய்கை என்பவற்றை மேற்கொள்ளல் போன்று இறப்பர் நிலங்களில் கரறுவா, கோப்பி, மிளகு பயிரிடப்படுகின்றது)

- ✓ உள்நாட்டு நுகர்வு அதிகரித்தல்.

  (உதாரணம்:- தெங்கு, மரக்கறி, பால், மீன்)

- ✓ புதிய நிலங்களை பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தல்.

  (உதாரணம்:- இறப்பர் செய்கை - வவுனியா, முல்லைத்தீவு)

- ✓ சேதன உரப்பாவனையை ஊக்குவித்தல்.

(02) தொழில்நுட்பம் சார்ந்த நவீன போக்குகள்.

- ✓ நவீன தொழில்நுட்பத்தினை உடைய இயந்திரப் பயன்பாடு.

  (உதாரணம்:- நெல் - அறுவடை இயந்திரம், நாற்று நடும் இயந்திரம்)

- ✓ விலங்கு வேளாண்மையில் இயந்திரப் பாவனையை அதிகரித்தல்.

- ✓ குறைந்த அளவு பட்டை வெட்டி பால் சேகரிக்கும் புதிய முறை அறிமுகம்.

(03) வர்த்தகம் சார்ந்த நவீன போக்குகள்.

- ✓ நுகர்வோரை கவரும் வகையில் கவர்ச்சிகரமான விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளல்.

- ✓ புதிய பொதியிடல் முறைகளைப் பயன்படுத்துதல்.

- ✓ தனியார் நிறுவனங்களின் எழுச்சி.

  (உதாரணம்:- மில்கோ . நெஸ்லே)

- ★ **விவசாயத்திற்கான அரசு ஆதரவு.**
  - ✓ ஏற்றுமதி வரி சலுகைகளை வழங்குதல்.
  - ✓ சந்தை சேவைகள் விரிவாக்கம்.
  - ✓ உர மானியம் வழங்கல்
  - ✓ ஓய்வூதியத்திட்டம், காப்புறுதி முறை என்பவற்றை அறிமுகம் செய்தல்.

✓ பயிற்சி நிலையங்களை அமைத்தல்

- மாத்தளை - சிறு ஏற்றுமதிப் பயிர்கள்.
- கன்னொருவ - விவசாய தொழில்நுட்பப் பூங்கா.

✓ விநியோக சேவைகளை விரிவுபடுத்தல்.

✓ ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்குதல்.

- நெல் - பொலன்னறுவை , குருநாகல்
- முந்திரி - தம்பதெனிய.
- வெற்றிலை - கட்டுகம்பொல.
- மிளகாய் - ராஜாங்கன.

✓ வீட்டுத் தோட்டத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

✓ விவசாயத்தில் **திவிநெகும, கமதிரிய** ஆகிய வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

★ **இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயம் முக்கிய இடத்தைப் பெறுவதற்கான காரணங்கள்.**

✓ மொத்தத் தேசிய உற்பத்தியில் 11.1% சதவீதத்திற்கு பங்களிப்பினை வழங்குகின்றமை.

✓ ஏற்றுமதி வருமானத்தில் 24% சதவீதம் பெறப்படுகின்றமை.

✓ 31% சதவீத தொழிலாளர் படை ஈடுபடுகின்றமை.

✓ நிலப் பயன்பாட்டில் பெரும்பகுதி விவசாயப் பயிர்களுக்காகப் பயன்படுதல்.

✓ கைத்தொழிலுக்கு மூலப்பொருட்களை வழங்குகின்றமை.